MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 03–06–2022(Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **03.06.2022 ஆம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம்**<br>முன்னிலை: **திரு.உ.முகமதுயாசின்**, நகர்மன்றத்தலைவர் | |
| 28 | **மன்றப்பொருள் எண்.1**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலக புலனம்(வாட்ஸ்அப்) செய்தி நாள்.15.03.2022–ன்படி, நீர்நிலைகள் மேம்பாட்டு திட்டத்தில் இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.4, சாலைக்கரையான் ஊரணியினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.60.00 இலட்சம் ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலைக்கரையான் ஊரணியினை மேம்பாட்டுப் பணியினை மேற்கொள்ள உத்தேச திட்ட மதீப்பீடு ரூ.91.00 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளதற்கு அரசு முழு மானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | **மன்றப்பொருள் எண்.2**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை புதிய கட்டுமான பணி நடைபெற உள்ளதால் மார்க்கெட் வட்டார தொழிலாளர் நலச்சங்கம் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளதால் வழக்கு எண்.W.P.(MD).No. 3636/2022 மேற்படி வழக்கிற்கு அரசு வழக்கறிஞர் திரு.T.அஜ்மல்கான் வாதிட்டுள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.9500/– மேற்படி வழக்கிற்கு அவரது உதவி வழக்கறிஞருக்கு ரூ.2000/–திரு.சபாபதி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று ரூ.11,500/– வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 30 | **மன்றப்பொருள் எண்.3**<br>இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அலுவலகப்பணி நிமித்தம் காரணமாக வெளியூர் செல்லும் பணியாளர் மற்றும் அலுவலர்களுக்கு பயணப்படி வழங்க 2022–2023ம் ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.2,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 31 | **மன்றப்பொருள் எண்.4**<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் வீடுவீடாக சென்று குப்பைகளை மக்கும், மக்காத குப்பை என தரம்பிரிக்கும் முதன்மை சேகரிக்கும் பணிக்கு 25 பேட்டரி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய ஆண்டு பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைந்துள்ளது. எனவே பேட்டரி வாகனங்களை ஆண்டு முழுவதும் பராமரிப்பு பணிமேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் | BOV வாகனங்களின் ஆண்டு பராமரிப்பு பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் ஸ்வஸ்திக் டிரேடர்ஸ் மதுரை நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு அனுமதிக்கப்படுகிறது. |
| 32 | **மன்றப்பொருள் எண்.5**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20789/UPA1/ 2021 நாள்.29.03.2022 உத்தரவின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு காய்கறி வியாபாரத்திற்கு 34 தள்ளுவண்டிகள் சிற்றுண்டி வியாபாரம் செய்வதற்கு 10 தள்ளுவண்டிகள் மற்றும் பூவியாபாரம் செய்வதற்கு 20 தள்ளுவண்டிகள் ஆக மொத்தம் 64 தள்ளுவண்டிகள் வழங்க ரூ.47,12,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் பதிவு செய்யலாம். | பதிவு செய்யப்படுகிறது. |
| 33 | **மன்றப்பொருள் எண்.6**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திருமதி.A.சந்திரபிரியா என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவுசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கலாம். |

<table>
<tr>
<td>34</td>
<td>

**மன்றப்பொருள் எண்.7**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் இந்நகராட்ச்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பள்ளி வளாகம் , வகுப்பறை கழிப்பறைகளை ஆகியவற்றை பள்ளி இயங்கும் அனைத்து நாட்களிலும் சுத்தம் செய்யும் பணிக்கு கல்விநிதியிலிருந்து தூய்மைப்பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 30.04.2022 உடன் முடிவடைகிறது. மேற்படி பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் அரசு வழிகாட்டுதலின்படி, தூய்மைப்பணியாளர்களை தனியார் நிறுவன மூலம் விநியோகம் செய்ய புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

</td>
<td>பள்ளி கழிப்பறை மற்றும் தூய்மை பணியனிை மேற்கொண்டு வரும் ஸ்ரீசீரடி சாய் மேன்பவர் ஏஜென்சி நிறுவனத்திற்கு மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>35</td>
<td>

**மன்றப்பொருள் எண்.8**

இந்நகராட்சியில் **நமக்கு நாமே திட்டம் 2021–22 ன்கீழ்** கீழ் பணி மேற்கொள்ள 29.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்.</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்</th><th>மதிப்பீடு ரேட்டைவிட குறைந்தஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th><th>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td></td><td>நமக்கு நாமே திட்டம் 2021–22</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1.</td><td>வார்டு 14 பேங்க் ரோட்டில் கண்காணிப்பு சி.சி.டிவி கேமிரா அமைக்கும் பணி</td><td>5.00</td><td>ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி 0.21 % குறைவு</td><td>திரு. எம்.லத்திப் 1.21 % அதிகம்</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், நீர் உந்தும் நிலையம், நகராட்சி உரக்கிடங்கு பகுதிகளில் பாதுகாப்பு வளையத்துடன் கூடிய மரக்கன்றுகள் நடும் பணி</td><td>6.00</td><td>ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி 0.43 % குறைவு</td><td>திரு. எம்.லத்திப் 0.43 % அதிகம்</td></tr>
</table>

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

</td>
<td>அனுமதிக்கலாம்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>வ.எண்.1 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.21 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அரசு திட்டப்பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>வ.எண்.2 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 0.43 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அரசு திட்டப்பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | |
| 36 | **மன்றப்பொருள் எண்.9**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும் பொருட்டு டெங்குப்புழு ஒழிப்பு பணிக்கு தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 40 DBC பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியானது ஆண்டு முழுவதும் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது மேலூர் நகராட்சியில் DBC பணியாளர்களை விநியோகம் செய்யும் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் ஆண்டு முழுவதும் டெங்கு ஒழிப்பு பணி தொடர வேண்டியுள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | DBC பணியாளர்களை சப்ளை செய்யும் ஸ்ரீசீரடி சாய் மேம்பவர் ஏஜென்சி நிறுவனத்த்திற்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது. |
| 37 | **மன்றப்பொருள் எண்.10**<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட கம்பர் தெரு வெள்ளநாதன்பட்டி பகுதிகளில் காவேரிகூட்டு குடிநீர் திட்டம் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் இல்லாததால் அப்பகுதியில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத காரணத்தால் மேற்படி பகுதிகளில் புதிதாக குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைக்க ரூ.2.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 38 | **மன்றப்பொருள் எண்.11**<br>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணிக்கு 07.04.2022அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதை பொதுமக்கள் அறியும் வண்ணம் மாலைமுரசு தினசரி நாளிதழில் மற்றும் Financial Express ஆங்கில நாளிதழில் 02.03.2022 அன்று விளம்பரம் வெளியிட்டமைக்கான கட்டணம் ரூ.28930/–ஐ Sudha Ads திருப்பூர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 39 | **மன்றப்பொருள் எண்.12**<br>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021–22ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட ஊரணிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மலம்பட்டி ஊரணி, மண்கட்டி தெப்பம் ஊரணிகளை மேம்படுத்தும் பணிக்கு 02.02.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதை பொதுமக்கள் அறியும் வண்ணம் தினசரி நாளிதழ் தீக்கதிர் நாளிதழில் விளம்பரம் வெளியிட்டமைக்கும்,Times of India ஆங்கில நாளிதழில் 21.01.2022 அன்று விளம்பரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.30076/– ஐ Sudha Ads நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலககுறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 40 | **மன்றப்பொருள் எண்.13**<br>இந்நகராட்சிக்குட்ட பகுதிகளில் செக்கடி, தினசரி சந்தைப்பகுதிகளில் கால்நடைகள் அதிகமாக பராபரியாய் சுற்றித்திரிவதால் பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் பயத்தையும் , வாகன போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துகிறது. மேற்படி தெருவில் சுற்றித்திரியும் கால்நடைகளை பிடித்து நகராட்சி மூலம் பாதுகாத்து உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்க அபராதம் விதிப்பது குறித்து நகரில் சுற்றித்திரியும் கால்நடைகளின் உரிமையாளர்கள் அறியுமாறு பத்திரிக்கைகளில் விளம்பரம் மேற்கொள்ளவும், அதனைத்தொடர்ந்து அரசிதழ்களில் வெளியிடவும் ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>கால்நடை பாதுகாப்பு மற்றும் அபராதம் விபரம்</u>**<br>1.சிறிய கால்நடை பிடித்து திரும்ப ஒப்படைக்க நாள் ஒன்றுக்கு ரூ.1000/–<br>2.பெரிய கால்நடை பிடித்து திரும்ப ஒப்படைக்க நாள் ஒன்றுக்கு ரூ.2000/–<br>அலுவலகக்குறிப்பு<br>அ.மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அபராதக்கட்டணம் விதிப்பது குறித்து மன்றம் முடிவுசெய்யலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

41

## மன்றப்பொருள் எண்.14

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள 07.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட அதிகஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.39, வார்டு 23ல் உள்ள தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணி | 787.00 | M/s True Waves Associates 13.36 % அதிகம் | திரு.முருகேசன் 15.32 % அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

வ.எண்.1ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் M/s True Waves Associates என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 13.36% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் குறைத்து வழங்க கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டதில், 4.99% குறைத்து வழங்கியுள்ளதால் அரசு திட்டப்பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

42

## மன்றப்பொருள் எண்.15

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF++ சான்று பெறவும், தூய்மை நகர கணக்கெடுப்பு 2022 ஆகிய திட்டங்களுக்கு நகரைப்பற்றிய விவரங்களை கணினியில் வார்டு வாரியாக தூய்மை இந்தியா திட்ட இணையதளத்தில் உள்ளீடு செய்யவும், அதில் மேலூர் நகரின் தற்போதைய வார்டு எல்லைகளுடன் கூடிய Google Earth Map ல் அனைத்து விபரங்களும் குறித்து மேற்படி இணைய தளத்தில் உள்ளீடு செய்தால் மட்டுமே கணக்கெடுப்பு பணியில் கலந்து கொள்ள இயலும் என நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதின்பேரில் Google Earth Map தயாரிக்கும் பணியை மேற்கொள்ள உள்ளூர்(ம) வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 43 | **மன்றப்பொருள் எண்.16**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சந்தைபேட்டையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 2003 ம் ஆண்டு கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேற்கூரை சுவர்கள் அடிக்கடி பெயர்ந்துவிழுகின்றது இதனால் சிகிச்சைக்கு வரும் வெளிப்புற நோயாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் மற்றும் சிறுகுழந்தைகள் பாதிப்படையும் சூழல் ஏற்படுகிறது. மேலும் சுவர்களில் நீர் கசிவின் காரணமாக விரிசல் ஏற்படுகிறது. எனவே நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை பழுதுநீக்கம் செய்து மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ரூ.5.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட பணியினை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 44 | **மன்றப்பொருள் எண்.17**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.2/3ஏ, பேருந்துநிலையம் 1972ல் கட்டப்பட்டது. 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் மேற்கண்ட பேருந்துநிலையத்தினை மேம்பாடு செய்ய கோரிக்கை வைக்கப்பட்டதின்பேரில் மேலூர் நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்பாடு மற்றும் மறுகட்டமைப்பு செய்ய ரூ.7.00 கோடியில் பணிமேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக கட்டிடம் நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/ கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை (SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல்/ அதன்பேரில் விரிவான மதிப்பீடு தயார் செய்தல்/ அதனை TUFIDCO நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல்பெறுதல்/ அதற்கான நிர்வாக அனுமதி தொழில்நுட்ப அனுமதி பெறுதல் போன்ற பணிகளை தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் Technical Consultant நியமனம் செய்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.14.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 45 | **மன்றப்பொருள் எண்.18**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022–2023ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு எண்.14ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20543/2022/தி2–2 நாள்.19.04.2022ன்படி , கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட ஊரணிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட ஊரணிகளை ரூ.155.00 இலட்சத்தில் மேம்படுத்த தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப்படுகிறது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட, வார்டு 24, சொக்கர் ஊரணியினை மேம்படுத்தும் பணி.</td><td>85.00</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட, வார்டு 21, கண்ணபெருமாள் குளம் (குப்பையாண்டி ஊரணி) ஊரணியினை மேம்படுத்தும் பணி.</td><td>70.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>155.00</td></tr>
</table>
<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>46</td>
<td>மன்றப்பொருள் எண்.19<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் நகரில் சேகரமாகும் குப்பைகளை MCC, OCCல் உரமாக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் குப்பைகள் போக மீதமுள்ள குப்பைகளை ஒரு நாளைக்கு 11 டன் குப்பைகளை உரக்கிடங்கில் கொட்டுவதற்கு ஏதுவாக ஜே.சி.பி இயந்திரம் மூலம் குப்பைகளை ஒதுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குப்பைகளை ஒதுக்கும் பணியினை 2022–2023 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>உரக்கிடங்கு பணிக்கு ஏற்கனவே ஜே.சி.பி இயக்கி வரும் நிஷா கண்ஸ்ட்ரக்ஷன் எர்த் ஒர்க்ஸ் நிறுவனத்திற் ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 47 | **மன்றப்பொருள் எண்.20**<br>இந்நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளபடும் பணிகளுக்கு 19.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்படுகிறது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்தஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | **5** |
| 1. | இந்நகராட்சி வார்டு 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோக வால்வு, மேல்நிலைத்தொட்டி மற்றும் மின்மோட்டார் இயக்குதல் பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ளும் பணி. | 9.90 | விவேகானந்தா டெக்னிக்கல் லேபர் கான்ட்ரெக் –0.18 % குறைவு | சுரேஷ் பம்ப் டிரேடார்ஸ் 0.79 % அதிகம் |
| 2. | இந்நகராட்சி வார்டு 1 முதல் 27 வார்டுகளில் அமைந்துள்ள குடிநீர்விநியோக பிரதான குழாய் மற்றும் பகிர்மானக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் ஆண்டு பராமரிப்பு பணி | 9.80 | திரு.எஸ்.ரவி –0.14 % குறைவு | திருமதி.பி.அமுதா 1.27 % அதிகம் |
| 3. | இந்நகராட்சி வார்டு 1 முதல் 27 வார்டுகளில் அமைந்துள்ள குடிநீர்விநியோக சிறுமின்விசை மோட்டார்கள் மற்றும் அடிகுழாய்களை ஆண்டு பராமரிப்பு செய்யும் பணி. | 9.80 | விவேகானந்தா டெக்னிக்கல் லேபர் கான்ட்ரெக் –0.17 % குறைவு | சுரேஷ் பம்ப் டிரேடார்ஸ் 0.76 % அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

வ.எண்.1 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் விவேகானந்தா டெக்னிக்கல் லேபர் கான்ட்ரெக் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.18 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.2 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.ரவி என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.14 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.3 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் விவேகானந்தா டெக்னிக்கல் லேபர் கான்ட்ரெக் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட –0.17% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும் குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

48

**மன்றப்பொருள் எண்.21**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2022–2023ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு எண்.17ல் குறிப்பிட்டுள்ள அறிவிப்பினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20543/2022/தி2–1 நாள்.19.04.2022ன்படி , கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021–22ன்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பூங்காக்களை மேம்படுத்தும் பணிகளுக்கு கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட பூங்காக்களை ரூ.200.00 இலட்சத்தில் மேம்படுத்த தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு முழுமான்யத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட, வார்டு 25, சர்வே எண்.406/12, 407/4, 408/1,2,3 ல் அமைந்துள்ள மல்லிகை நகர் பூஙகாவினை மேம்படுத்தும் பணி. | 50.00 |
| 2. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 16, சர்வே எண்.116/C(P), 117(3(P) ல் விஷ்ணு நகரில் புதிதாக பூங்கா அமைக்கும் பணி. | 50.00 |
| 3. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 26, சர்வே எண்.283/1,2 ல் விஷ்வகர்மா நகரில் புதிதாக பூங்கா அமைக்கும் பணி. | 50.00 |
| 4. | இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.152/12 ல் பூங்கா நகரில் புதிதாக பூங்கா அமைக்கும் பணி. | 50.00 |
| | மொத்தம் | 200.00 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

49

**மன்றப்பொருள் எண்.22**

மேலூர் நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.233/5, பெரியகருப்பன் காலணியில் அமைந்துள்ள தூய்மைப்பணியாளர் குடியிருப்பு மிகவும் சிதிலமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட குடியிருப்பை முழுமையாக இடித்து அப்புறப்படுத்தி புதிய தூய்மைப்பணியாளர் குடியிருப்பு கட்ட 26.03.2022 அன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொளி ஆய்வுக்கூட்டத்தில் இந்நகராட்சி தூய்மைப்பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டிடம் கட்ட கோரிக்கை வைக்கப்பட்டதன்பேரில் அதன்பேரில் ரூ.500.00இலட்சத்திற்கு மதிப்பீட்டில் பணிமேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக கட்டிடம் நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/ கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை (SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல்/ அதன்பேரில் விரிவான மதிப்பீடு தயார் செய்தல்/ அதனை TUFIDCO நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல்பெறுதல்/ அதற்கான நிர்வாக அனுமதி தொழில்நுட்ப அனுமதி பெறுதல் போன்ற பணிகளை தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் (Technical Consultant) நியமனம் செய்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 50 | **மன்றப்பொருள் எண்.23**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் பேருந்துநிலையத்தில் கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் 31.03.2022 ம் தேதியுடன் முடிவடைவதால் 2022–2023ம் ஆண்டிற்கு 28.01.2022 அன்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெற இருந்தநிலையில் 26.01.2022அன்று நகர்ப்புற உள்ளாட்சிதேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதால் ஏலம் நடைபெறவில்லை. மேலும் நிர்வாக காரணங்களால் 30.03.2022 நடைபெறவிருந்த ஏலமும் நடைபெறவில்லை. எனவே மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளும்வரை நகராட்சி மூலம் வசூல்செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 51 | **மன்றப்பொருள் எண்.24**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை/ வாரச்சந்தை முதலிய இனங்களை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கீழ்க்கண்ட வழக்குகள் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ளதற்கு நகராட்சி சார்பாக ஆஜரானதற்கு வழக்கு கட்டணம் திரு.பாண்டியராஜன் அட்வகேட் அவர்களுக்கு தொகை ரூ.38000/– வழங்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு.<br>W.P.No.5238/2022 — L.குப்புராஜ் (ரூ.9500)<br>W.P.No.5390/2022 / 25.03.2022 — A.சந்திரன் (ரூ.9500)<br>W.P.No.5302/2022 / 25.03.2022 — L.குப்புராஜ் (ரூ.9500)<br>W.P.No.3636/2022/ 28.02.2022 — S.P.மணவாளன் (ரூ.9500)<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.76/2021/அ2) | அனுமதிக்கப்படுகிறது. |
| 52 | **மன்றப்பொருள் எண்.25**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை/ வாரச்சந்தை முதலிய இனங்களை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் கீழ்க்கண்ட வழக்குகள் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ளதற்கு நகராட்சி சார்பாக ஆஜரானதற்கு எதிர்மனு தாக்கல் செய்தமைக்கான கட்டணம் AAG (Additional Advocate General) திரு. வீரகதிரவன் அவர்களுக்கு ரூ.35000/– வழக்குக்கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>W.P.No.5238/2022 — L.குப்புராஜ்<br>W.P.No.5390/2022 / 25.03.2022 — A.சந்திரன்<br>W.P.No.5302/2022 / 25.03.2022 — L.குப்புராஜ்<br>W.P.No.3636/2022/ 28.02.2022 — S.P.மணவாளன்<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 53 | **மன்றப்பொருள் எண்.26**<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி வரைபடம் தயார் செய்யும் உரிமம் வழங்குமாறு கீழ்க்கண்ட பொறியாளர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.<br><br>1. திரு.பி. பாலாஜி, 19, திருவள்ளுவர் நகர், மேலூர்<br>2. திரு.வி.முருகேசன், 6ஏ, பழனியப்பன் காம்ப்ளக்ஸ் மெயின் ரோடு, மேலூர்<br>3. திரு.செந்தில்குமார், 10/325 இராசாசி நகர், கருங்காலக்குடி<br>4. திரு.ப.மீரா உசேன், 17ஏ, சந்தைபேட்டை முதல்தெரு, மேலூர்<br>5. திரு.என்.கே.பிரவீன் 2/32 காந்தி நகர்,மேலூர்.<br>6. திரு.எஸ்.அரவிந்த்சாமி, சொக்கம்பட்டி, மேலூர்<br>7. திரு.குறிஞ்சி குமார், 3, காந்தி நகர் மேலூர்.<br><br>மேற்கண்ட விண்ணப்பத்தாரர்களின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சியில் கட்டிட வரைவாளர்களாக பதிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 54 | **மன்றப்பொருள் எண்.27**<br><br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய வேண்டி திருமதி.S.லலிதா என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம் நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

55

**மன்றப்பொருள் எண்.28**

இந்நகராட்சிப்பகுதியில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளபடும் பணிக்கு 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட மதிப்பீட்டுஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | 5 |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் 31 இடங்களில் மினி ஹைமாஸ்ட் சோலார் (LED) மின்சிக்கன தெருவிளக்குகள் அமைக்கும் பணி. | 103.00 | எ.எஸ்.கே. சுந்தரமூர்த்தி மதிப்பீடு விலைவிகிதத்தில் | வி.அங்குராஜ் 3.57 % அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

வ.எண்.1 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எ.எஸ்.கே. சுந்தரமூர்த்தி என்பவர் மதிப்பீடு விலைவிகிதத்திலேயே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அரசு திட்டப்பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

56

**மன்றப்பொருள் எண்.29**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் டெங்குபுழு தடுப்பு நடவடிக்கைக்காக கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து மருந்து தெளித்து கட்டுப்படுத்தும் பணிக்கு ஜெய்சீரடி சாய் மேன்பவர்ஏஜென்ஸிஸ் மூலம் 40 DBC பணியாளர்கள் விநியோகம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தனர். மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிய ஒப்பந்தகாலம் 30.04.2022 உடன் முடிவடைந்துள்ளதால் புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது. புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரி, ஒப்பந்ததாரர் நிர்ணயம் செய்ய காலதாமதம் ஏற்படும் என்பதாலும், தொடர்ந்து டெங்குபுழு தடுப்பு நடவடிக்கை அவசியமான பணியாக இருப்பதாலும் பழைய ஒப்பந்த நிறுவனத்திடம் மேலும் இரண்டு மாதங்களுக்கு பழைய ஒப்பந்த விகிதத்தில் பணிசெய்ய ஒப்புதல் பெறப்பட்டதாலும், மேலும் 2 மாதங்களுக்கு பணிநீட்டிப்பு செய்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

அ. மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 57 | **மன்றப்பொருள் எண்.30**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.10309–12/2022/எம்3 நாள்.29.04.2022ன்படி, நகர்மன்றத்தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக இரண்டு எண்ணம் பொலிரோ ஈப்பு வாகனம் தலா ரூ.8,27,742/– மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (ஜெம்ரேட்) விலைக்கு மிகாமல் வாங்க அனுமதி வழங்கப்பட்டது. தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3 நாள்.06.05.2022 ல் நகர்மன்றத்தலைவர் பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ரூ.1682000/– இலட்சம் மதிப்பீட்டில் அரசுநிர்ணயம் செய்யப்பட்ட விலையில் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. GEM Rateல் நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பின்னேற்பு பெற்று மேற்கண்ட Scorpio வாகனம் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பின்னேற்பு பெற நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 58 | **மன்றப்பொருள் எண்.31**<br>மேலூர் நகராட்சிக்கு எதிராக திரு.சுரேஷ்குமார், (ம) மதுரை வீரன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்தநிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரைஅவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட வழக்கு தொடர்பாக திரு.P. ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டுள்ளது. சட்டக்கருத்துரு பெற்றதற்கான வழக்குக்கட்டணம் ரூ.5000/– ஸ்ரீநிவாஸ் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 59 | **மன்றப்பொருள் எண்.32**<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 13.05.2022 மற்றும் 18.05.2022 தேதிய காணொளி ஆய்வுகூட்டங்களில் அறிவுறுத்தியதின்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தினசரி சந்தையை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள இருப்பதால் அங்கு இயங்கி வரும் கடைகளை இடமாற்றம் செய்யும் பொருட்டு வாரச்சந்தை வளாகப்பகுதியில் தற்காலிக கடைகள் அமைக்க ரூ.35.00இலட்சம் மதிப்பீட்டில் தயார்செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கக்கோரி மதுரை நகராட்சி நிர்வாகமண்டல இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. திட்டப்பணியினை விரைந்து முடித்து அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று கருத்துரு அனுப்பவும், மேற்கண்ட செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 60 | **மன்றப்பொருள் எண்.33**<br>இந்நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவு மேலாண்மை திட்டப்பணி (FSTP) 20KLD ரூ.275.00இலட்சம் மதிப்பீட்டில் பணிமேற்கொள்ளப்பட்டு முடிவுற்றுள்ளது. மேற்கண்ட பணிக்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தினரிடம் CTO இயக்குவதற்கான அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கான சோதனை ஒட்டம் நிறைவு பெற்று பணிதொடங்கும் நிலையில் உள்ளது. எனவே கசடு கழிவு மேலாண்மை திட்டப்பணியினை ஆண்டு பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணி மேற்கொள்ள திட்டமதிப்பீடு ரூ.11.60 இலட்சத்திற்கு தயார்செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 61 | **மன்றப்பொருள் எண்.34**<br>இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான டோனர்களுக்கான விலைப்புள்ளி 06.05.2022 அன்று கோரப்பட்டதில் கீழ்க்காணும் விபரப்படி விலைப்புள்ளி வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><table><tr><td>வ.எண்.</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>டோனர் ஒன்றின் விலை</td></tr><tr><td>1.</td><td>சக்தி கம்ப்யூட்டர்ஸ், மேலூர்</td><td>ரூ.1150</td></tr><tr><td>2.</td><td>ஜீவா சிஸ்டம்ஸ் , மேலூர்</td><td>ரூ.1380</td></tr><tr><td>3.</td><td>கிராண்ட் சிஸ்டம்ஸ், மேலூர்</td><td>ரு.1250</td></tr></table>அலுவலகக்குறிப்பு<br><br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் உள்ள சக்தி கம்ப்யூட்டர்ஸ் மேலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| 62 | **மன்றப்பொருள் எண்.35**<br>உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதி 2012–2013ன் கீழ், மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பட்டாகுளம் மயானத்தில் நவீன எரிவாயு தகனமேடை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணிகளை Peoples Trust in Technical Institute திருமங்கலம் நிறுவனத்திற்கு 10.06.2021 முதல் ஒரு வருடத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது அந்நிறுவனத்தின் பணிக்காலம் முடிவடைய உள்ளது. மேலும் நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பு பணியினை மேற்பொண்டு வரும் Peoples Trust in Technical Institute தன்னால் மேற்கண்ட பணியினை தொடர்ந்து செய்ய இயலாது என 05.05.2022 தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.மேலும் TEEED Foundation,Madurai என்ற நிறுவனம் மேற்கண்ட பணியினை செய்ய விருப்பக்கடிதம் வழங்கியுள்ளனர். எனவே TEEED Foundation,Madurai நிறுவனம் தனது கடிதத்தில் எரிவாயு தகன மேடையினை பராமரித்து வர சம்மதக்கடிதம் அளித்ததின் பேரில் மேற்படி நவீன எரிவாயு தகன மேடையினை பராமரிப்பதற்கும் அவற்றில் எரியூட்டப்படும் பிரேதங்களுக்கு ஒரு பிரேதம் எரியூட்ட ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) மனுதாரர்களிடமிருந்து பெற்று அதில் நகராட்சி பங்குத்தொகையாக ரூ.1200/– (ரூபாய் ஆயிரத்து இருநூறு மட்டும்) இந்நகராட்சிக்கு செலுத்த ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டிற்கு TEEED Foundation,Madurai நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |

<table>
<tr><td>63</td><td>மன்றப்பொருள் எண்.36<br>TN 59 BU 1296 ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள கீழ்க்கண்ட பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மகேந்திரா பொலிரோ கம்பெனிக்கு கீழ்க்கண்ட பழுதுகளை பழுதுநீக்கம் செய்தவற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000/—க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>1. இஞ்சின் ஆயில், கிரைவன் ஆயில், கியர்பாக்ஸ் ஆயில், பிரேக் ஆயில் மாற்றுதல்.<br>2. கிளார்ட்ச் பிளேட், கவர் அலும்பள்செட் மாற்றுதல்<br>3. ரேடியேட்டர் சர்வீஸ், கூலன் ஆயில் மாற்றுதல்<br>4. A.C கம்ரசர் மாற்றுதல்.<br>5. வயரிங் செக்கப்<br>6. டோர் செக்கப்<br>7. சஷ்பென்சன் செக்கப்<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>64</td><td>மன்றப்பொருள் எண்.37<br><br>NULM – 2021–22 –ன் கீழ் மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் நகர்புற ஆதரவற்றோர் மற்றும் நோயாளிகளின் காப்பாளர்கள் தங்கும் இல்லம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் கட்டும் பணி மேற்கொள்ள 24.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><td>வ. எண்.</td><td>வேலையின் விபரம்</td><td>மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்</td><td>மதிப்பீடு ரேட்டைவிட அதிகஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</td><td>மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>1.</td><td>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் நகர்புற ஆதரவற்றோர் மற்றும் நோயாளிகளின் காப்பாளர்கள் தங்கும் இல்லம் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் கட்டும் பணி</td><td>ரூ. 100.00</td><td>வி.அங்குராஜ்<br>4.99 % அதிகம்</td><td>திரு.ஏ.எஸ்.கே. சுந்தரமூர்த்தி<br>6.37% அதிகம்</td></tr>
</table>
<br>பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

அலுவலக குறிப்பு

வ.எண்.1ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் வி.அங்குராஜ் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.99% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் குறைத்து வழங்க கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டதில், தற்போது கட்டுமானபொருட்களின் விலைவிகிதங்கள், மற்றும் வேலையாட்கள் கூலி அதிகமாக இருப்பதால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை குறைக்க வழிவகை இல்லை என தெரிவித்துள்ளதன் அடிப்படையில் **4.99%** அதிகமாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.வி.அங்குராஜ் என்பவருக்கு அரசு திட்டப்பணியாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதாலும், மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

65

**மன்றப்பொருள் எண்.38**

இந்நகராட்சியில் **தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (Day-NULM)** கீழ் பணி மேற்கொள்ள **11.05.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | **5** |
| | **தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (Day-NULM)** | | | |
| **1.** | காய்கறி மற்றும் பழக்கடை நடத்திட **34** எண்ணம் நடமாடும் கடைகள், உணவு பொருட்கள் விற்பனை **10** எண்ணம் மற்றும் பூ வியாபாரம் செய்ய **20** எண்ணம் நடமாடும் கடைகள் தயார் செய்து விநியோகம் செய்யும் பணி | **47.12** | A.K.B ராஜா எண்டர்பிரைசஸ் **–0.14** % குறைவு | ஏ.எஸ்.கே. சுந்தரமூர்த்தி **6.45** % அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

வ.எண்.1 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் A.K.B ராஜா எண்டர்பிரைசஸ் என்பவர் **–0.14%** சதவீதம் குறைத்து கொடுத்துள்ளதால் அரசு திட்டப்பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்கண்ட பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

66

**மன்றப்பொருள் எண்.39**

மேலூர் நகராட்சிக்கு எதிராக திரு.சுரேஷ்குமார், (ம) மதுரை வீரன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்து நடைபெற்று வந்தநிலையில் சென்னை நகராட்சி நிர்வாக இணை இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட வழக்கு தொடர்பாக திரு.வீரகதிரவன் உயர்நீதிமன்ற முதுமை அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்–III, மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளை, அவர்களிடம் சட்டக்கருத்துரு பெறப்பட்டுள்ளது. சட்டக்கருத்துரு பெற்றதற்கான வழக்குக்கட்டணம் ரூ.2000/– வழங்க மன்றம் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

67

**மன்றப்பொருள் எண்.40**

மேலூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2022–2023 முதல் 2024–2055 முடிய மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 31.05.2022ல் ஏலம் /ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்ததாரர்கள் கலந்துகொண்டனர்.

**பொதுஏலம்**

| வ. எண். | பெயர் / முகவரி | ஏலம்கோரியத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஏ.எஸ்.கே.சுந்தரமூர்த்தி, த/பெ காயாம்பு<br>கூட்டுறவுபட்டி, இடையமேலூர்,<br>சிவகங்கை | 39,01,000 |
| 2. | எம்.லத்திப், த/பெ முகமது இப்ராஹிம்<br>34, நாளங்காடி தெரு, மேலூர். | 35,00,000 |
| 3. | ஏ.முத்துப்பாண்டி<br>52–31, ஆணையூர், மதுரை | 37,00,000 |

**ஒப்பந்தப்புள்ளி**

| வ. எண். | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1.. | திரு.எம்.இளையராஜா, த/பெ மொக்கையன்,<br>சிலோன் காலனி மேற்கு மில்கேட்,<br>கருத்தபுளியம்பட்டி,<br>மேலூர். | ரூ.39,00,000 |
| 2. | சே.எழில்வேந்தன்,<br>த/பெ சேதுபதி,<br>84/54, காந்திஜி பூங்கா ரோடு<br>மேலூர். | ரூ.40,20,000 |

அனுமதிக்கப்படுகிறது.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகளில் ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த தொகை கோரிய திரு. சே.எழில்வேந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.40,20,000/– ஆகும். அந்த தொகை சென்றாண்டு கேட்பினைவிட ரூ.408700/– கூடுதலாகவும், மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.3974892/–ஐக் காட்டிலும் ரூ.849108/–அதிகமாக உள்ளது. எனவே வாரச்சந்தை வசூல் செய்யும் உரிமம் 01.06.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள 10 மாத காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளவும், மேற்படி தொகையை 12 மாதத்திற்கு கணக்கீடு செய்து 01.04.2023 முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 12 மாதங்களுக்குரிய ஏலத்தொகையுடன் 5% வரிஉயர்வு செய்தும், மூன்றாம் ஆண்டான 01.04.2024 முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு 5% உயர்வு செய்தும் 2022–2023 முதல் 2024–2025 முடிய மூன்றாண்டு குத்தகை இனங்களின் பொதுஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்புக்கட்டுபாடுகளுக்குட்பட்டு திரு.சே.எழில்வேந்தன் என்பவருக்கு 01.06.2022 முதல் 31.03.2025 முடிய உள்ள காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

68

**மன்றப்பொருள் எண்.41**

இந்நகராட்சி பகுதியில் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22ன்** கீழ் மேற்கொள்ளபடும் பணிகளுக்கு 27.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட அதிகஅளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரா் பெயா் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரா் பெயா் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **2** | 3 | 4 | 5 |
| 1. | நொண்டிகோவில்பட்டியில் அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணி. | 10.00 | எஸ்.காஞ்சனா 4.80 % அதிகம் | எஸ்.தவப்பாண்டி 7.93 % அதிகம் |
| 2. | பல்லவராயன்பட்டியில் போர்வேல் மற்றும் குளியல்தொட்டி அமைக்கும் பணி | 5.00 | எஸ்.காஞ்சனா 4.67 % அதிகம் | பி.வெள்ளையம்மாள் 5.67 % அதிகம் |
| 3. | பரப்பராங்குளம் மயானச்சுற்றுச்சுவா் போர்வெல் மற்றும் குளியல் தொட்டி அமைக்கும் பணி. | 13.50 | எஸ்.காஞ்சனா 4.81 % அதிகம் | எஸ்.தவப்பாண்டி 8.01 % அதிகம் |
| 4. | வார்டு 3 கம்பர்தெரு 1வது குறுக்குத்தெரு மற்றும் உத்தாண்ட காளியம்மன்கோவில் அருகில் பேவர்பிளாக் தளம் அமைத்தல். | 7.00 | எஸ்.காஞ்சனா 4.80 % அதிகம் | எஸ்.தவப்பாண்டி 6.74 % அதிகம் |
| 5. | சந்தைபேட்டை வார்டு 5 போர்வெல் மற்றும் சின்டெக்ஸ் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணி. | 5.00 | பி.வெள்ளையம்மாள் 4.50 % அதிகம் | எஸ்.காஞ்சனா 4.84 % அதிகம் |

அனுமதிக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | வார்டு 22, சீதக்காதி தெரு வில் பேவர்பிளாக் தளம் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல். | 3.50 | எஸ்.தவப்பாண்டி<br>3.43 % அதிகம் | எஸ்.காஞ்சனா<br>5.76 % அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு

வ.எண்.1 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எஸ்.காஞ்சனா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.80 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.2 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எஸ்.காஞ்சனா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.67 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும் , வ.எண்.3 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எஸ்.காஞ்சனா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.81 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.4 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எஸ்.காஞ்சனா என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.80 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும் , வ.எண்.5 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் பி.வெள்ளையம்மாள் என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 4.50 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.6 ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் எஸ்.தவப்பாண்டி என்பவர் மதிப்பீடு ரேட்டை விட 3.43 % அதிகமாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும் , மேற்கண்ட ஆறு பணிகளும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட பணிகளாக இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணியினை முடிக்க வேண்டியிருப்பதால் மேற்கண்ட ஒப்பந்தாரர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

நகர்மன்றத்தலைவர்,
மேலூர் நகராட்சி.